# விட்டுப் பிரிந்தீரே அய்யா; எங்கள் விழிகளை குளங்களாக்கி!

**நெடுநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை யுடைத்து இவ்வுலகு**

என்ற குறளின் மூலம் நேற்றைக்கிருந்த மனிதன் இன்றில்லை என்பதுதான் இந்த உலகிற்கு உள்ள பெருமை என்றார் திருவள்ளுவர்.

உண்மைதான்!

ஆனால் எல்லா நிலைகளிலும் இந்த கருத்து ஏற்புடையதாவதில்லை.

மறுபரிசீலனை செய்ய முடியாதது மரணம் ஒன்று தான்.

ஆனாலும் சிலரின் மறைவை நம்மால் ஏற்க முடிவதில்லை.

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மாமேதை மாறன், தலைவர் கலைஞர் போன்றோரின் இழப்பு இன்றும் இதயத்தில் ஆராத ரணத்தோடு, நெஞ்சம் கனத்தபடி நினைவில் நின்று நிலைத்திருக்கிறது.

இதோ இன்றும் நமது இதயத்தில் இரத்தம் வடியும் கொடும்நிகழ்வாய், சோகப்புயல் சூழ்ந்திட்ட கலம் போல கழகக் குடும்பங்களில், காளையர் நெஞ்சங்களில், பத்திரிக்கையாளர் சிந்தையில் செந்தேளாய் கொட்டிய செய்தி!

அறிவுக்களஞ்சியம், அமைதியின் பிறப்பிடம், ஆற்றல் மிக்க பத்திரிக்கையாளர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள் மறைந்தார் எனும் செய்தி!

மனம் ஏற்க மறுக்கிறது! இறுதிநாள் இரவு வரை உறுதிக்குலையாத பத்திரிக்கை கழகப்பணியாற்றிய பெருமகன், விடியற்பொழுதில் கதிரவனை முந்திக்கொண்டு, காலதேவனின் கரங்களில் கண்ணயர்ந்தார்.

தலைவர் கலைஞரின் அக்காள் மகன் ஆசை மருமகன்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்புடன் செல்வா என்றழைத்த அறிவுச் செல்வம் அவர்கள் நம்மை யெல்லாம் விட்டுப் பிரிந்தார். விழிகளை குளங்களாக்கி!

நம்மை வழிநடத்தும் உயிரனைய தலைவர் தளபதியை வழிநடத்திய அறிவுடை ஆசான், மந்திரிக்கழகு, வரும்பொருள் உரைத்தல் என்பது போல் நமது முதலமைச்சருக்கு நிழல் அமைச்சராய் ஆலோசனைகள் பல வழங்கிய அறிவார்ந்த செல்வம் ஐயா அவர்கள், அந்த கம்பீரத்தலைவனை கண்ணீரில் கரைந்திடச்செய்து, சாவில்லா சரித்திரத்தில் சங்கமமானார்.

கோபாலபுரத்து குடும்பத்தினர் துடிக்கிறார்கள். துவள்கிறார்கள், ஜீவனற்று கண்ணீர் வடிக்கிறார்கள். காணப் பொறுக்காத காட்சி! காலத்தின் கட்டாயமானது.

கொள்கை மறவர் கூட்டம் தேம்பி அழுகிறது. திசையறியா கட்டுமரங்களாய் கழகக் கண்மணிகள்! இவை நான் நேரில் கண்ட நெஞ்சை உலுக்கிய காட்சி.

அரசியல் விற்பன்னர் முரசொலி மாறன் அவர்களுக்கு இணையாய், துணையாய், எதிரிகளை வீழ்த்தும் கலைஞரின் கணையாய் முரசொலியில் பயணித்தவர், இயக்கத்திற்கு பயன்பட்டவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

தலைவர் கலைஞரின் நிழலாய் முரசொலியில் பணிபுரிந்து, கட்டுரைகள் தீட்டி, கருத்துக்களை வரைந்து காலமெல்லாம் கழகத்தின் வளர்ச்சிக்காய் சிந்தித்த அறிவுப் பெட்டகம் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

பச்சையப்பன் கல்லூரி மாணவராய் இருந்த போதே பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயத்தில் இடம் பெற்றே, இரவில் வெகுநேரம் கழித்து வரும் அண்ணாவிற்கு தனது ஸ்கூட்டரை எடுத்துச் சென்று, சென்னை புகாரி ஹோட்டலில் பரோட்டா வாங்கி வந்து, அண்ணாவின் பசியாற்றி, பாசமிகு அண்ணா அவர்களால் "செல்வா, செல்வா" என்று ஆசையுடன் அழைக்கப்பெற்ற ஆசைச்செல்வம், அறிவுச் செல்வம் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

தலைவர் கலைஞரின் மருமகனாய் அவரின் மகள் செல்வி அவர்கள் பிறந்தபோதே, தலைவர் கலைஞர் தனது அக்காளுக்கு இப்படி கடிதமெழுதினார் "செல்வத்திற்கு ஒரு செல்வி பிறந்திருக்கிறாள்!" என்று தொட்டிலிட்டபோதே, சொல்லி வைத்த உறவாய்!

அப்படியொரு அன்பு, தலைவர் கலைஞருக்கு ஐயா செல்வம் அவர்கள் மீது.

முரசொலியில் அவர் பின்னிய "சிலந்தி" வளையில் சிக்கி தவித்த எதிர்கட்சியினர் ஏராளம்! அறிவு பெற்ற கழகத்தவர் ஆயிரமாயிரம்!

ஜெயலலிதா அரசு கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சனையில் எப்போதுமில்லாத காட்சியாய்



சட்டப்பேரவையில் அமைக்கப்பட்ட கூண்டில் புன்னகை தவழ காட்சி தந்த முரசொலிசெல்வம் அவர்களின் புகைப்படத்தை வெளியூர் சென்று திரும்பிய தலைவர் கலைஞர் பார்த்து, செல்வம் அவர்கள் பிறந்த போது திராவிட இயக்கத் தலைவர் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களின் நினைவாய் பன்னீர் செல்வம் என்று பெயர் வைத்ததை நினைவு கூர்ந்து முரசொலிசெல்வம் அவர்களின் நெஞ்சுறுதியைப் புகழ்ந்து, " கூண்டு கண்டேன்! குதூகலம் கொண்டேன்! " என்று கடிதமெழுதினார்

தேர்ந்த பத்திரிக்கையாளர், அறிவுசார் கட்டுரையாளர்! தொலைநோக்கு சிந்தனையாளர் அமைதியின் ஊற்று! பலரின் ஏற்றத்திற்கு ஏணி! இப்படி பல பண்பின் உறைவிடமான ஐயா செல்வம் அவர்களின் மறைவு ஆழமான வலியை அனைவர் மனதிலும் ஏற்படுத்தியுள்ளது.

என்னைப் போன்ற பல இளம் எழுத்தாளர்களை முரசொலியில் எழுத உற்சாகப்படுத்திய அறிவுடை ஆசான்.

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
*கொள்கை பரப்பு*
*துணைச் செயலாளர்*



எனது ஒவ்வொரு கட்டுரையும் முரசொலியில் வந்த மறுநாள் ஐயாவிற்கு அலைபேசியில் பேசி, நன்றி சொல்வேன். சிறப்பாக இருக்கிறது. பழைய சம்பவங்களை சரியாக எழுதுகிறீர்கள். இன்னும் நிறைய எழுதுங்கள் என்று அன்புடன் பேசுவார்.

எவ்வளவு பெரிய அறிஞர் அவர். சில நேரங்களில் எனது அழைப்பை கவனியாமல் போனால் அவரே, அலைபேசியில் அழைத்து பேசுவார். அவர் தந்த அன்பில், அரவணைப்பில், உற்சாகத்தில் இதுவரை மிகச்சரியாக 99 கட்டுரைகள் எழுதி விட்டேன்.

100 வது கட்டுரை சிறப்பாக எழுத வேண்டும். எதைப்பற்றி எழுதுவது? யாரைப் பற்றி எழுதுவது? அண்ணா தலைவர் கலைஞர், தளபதி அவரின் நல்லாட்சி! இப்படியெல்லாம் யோசித்த நான் ஐயாவிடமே கேட்கலாம் என்று நினைத்திருந்த வேளையில், எனது 100 வது கட்டுரைக்கு அவரே தலைப்பானார் என்பது எவ்வளவு வேதனைக்குரியது.

என்ன செய்வது? யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? அதனால் அண்ணா சொன்னதை அப்படியே குறிப்பிடுகிறேன்.

13.2.1963 தேதியிட்ட முரசொலியில் தலைவர் கலைஞரின் தாயார் அஞ்சுகம் அம்மையார் மறைவையொட்டி அண்ணா அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில்;

"அஞ்சுகம் அம்மையாருக்கு இருந்த தெளிவு, திடம், ஆர்வம் மறைந்து விடவில்லை. எங்கள் மூலமாக அவை தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து இருக்கக் காணுங்கள் என்று கருணாநிதி, மாறன், அமிர்தம், செல்வம் ஆகியோர் கூற வேண்டும்."

கதறிக் கிடப்பதை, கலங்கி தவிப்பதை; அஞ்சுகம் அம்மையார், ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

"குயில் பரந்து விட்டது! நாதம் நிலைத்திருக்கிறது!

மலர் உதிர்ந்து விட்டது, மணம் நிரம்பி இருக்கிறது.

அஞ்சுகம் மறைந்து விட்டார்கள் அவர்கள் பற்றிய நினைவுகள் நிலைத்திருக்கிறது. "

என்று எழுதியதை இங்கு நினைவூட்டி, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் வரிகளில் முரசொலி "உள்ளவரை ஐயா அவர்களின் புகழ் இருக்கும்!"

ஓங்குக ஐயா முரசொலி செல்வம் அவர்களின் பெரும்புகழ் !



திருச்சி, மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோவிலுக்கு 5 பேர் கொண்ட அறங்காவலர்களாக தமிழக அரசால் நியமிக்கப்பட்ட திருச்சி காந்தி மார்க்கெட் மன்னார் பிள்ளை தெருவை சேர்ந்த பா.சீனிவாசன், திருச்சி, தாராநல்லூர் அலங்கநாதபுரம் இரண்டாவது தெருவை சேர்ந்த மு.கருணாநிதி, மலைக்கோட்டை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தெருவை சேர்ந்த ரா.கலைச்செல்வி, திருச்சி, எடத்தெரு, கீழ நெய்க்கார தெருவை சேர்ந்த வி.ஸ்ரீதர், காட்டூர் காவிரி நகரை சேர்ந்த மு.கோவிந்தராஜ் ஆகியோர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம் ராஜ்முகமது மோகன் பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.

### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க

## ஒன்றிய, மாநகர, பகுதி - பேரூர் சார்பு அணிகளுக்கான விண்ணப்பங்கள்!

### மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அறிக்கை!

தஞ்சாவூர், அக்.14-

தஞ்சை வடக்கு மாவட்டதிற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளுக்கான விண்ணப்பம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறிக்கிணங்க இளைஞர் அணி, மாணவர் அணி, ஐ.டி விங் ஆகிய அணிகளுக்கு நேர்காணல் நடைபெற்றுள்ளது. அதனை தொடர்ந்து கீழ் கண்ட விபரப்படி மற்ற அணிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு நேர்கானல் செய்யப்பட உள்ளது. பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றிக்கான விண்ணப்பங்கள் இணையதளத்திலோ அல்லது கீழ்க்கண்ட தேதிகளில் மாவட்ட அலுவலகத்திலே பெற்று கொள்ள



வேண்டும்.

14.10.2024 திங்கள் காலை 10.00 மணிக்கு பொறியாளர் அணி, மதியம் 04.00 மணிக்கு மீனவர் அணிக்கும், 15.10.2024 செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு விளையாட்டு மேம்பாட்டு அணி, மாலை 04.00 மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணிக்கும், 16.10.2024 புதன் காலை 10.00 மணிக்கு தொழிலாளர் அணி, மாலை 04.00 மணிக்கு ஓட்டுநர் அணி, 17.10.2024 வியாழன் காலை 10.00 மணிக்கு வர்தகர் அணி, மாலை 04.00 மணிக்கு தொண்டர் அணிக்கும், 18.10.2024 வெள்ளி காலை 10.00 மணிக்கு விவசாய அணி, மாலை 04.00 நெசவாளர் அணிக்கும், 19.10.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு விவசாய தொழிலாளர் அணி, மாலை 04.00 மணிக்கு சுற்றுச்சூழல் அணிக்கும், 20.10.2024 ஞாயிறு காலை 10.00 மணிக்கு அயலக அணி மாலை 04.00 வழக்கறிஞர் அணிக்கும், 21.10.2024 காலை 10.00 மணி சிறுபான்மை நல உரிமைப்பிரிவு, மாலை 04.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழு அணிக்கும், 22.10.2024 காலை 10.00 மணிக்கு இலக்கிய அணி மாலை 04.00 மணிக்கு கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அணிக்கும் விண்ணப்பங்கள் வழங்கப்பட உள்ளது. கழக உணர்வு உள்ள, கழக பணிகளில் ஈடுபாடுள்ள செயல்பாட்டாளர்கள், அணிகளின் துறைகளுக்கு சம்மந்தப்பட்ட தகுதியான நபர்கள், தாய் கழகங்களில் வாய்ப்பு கிடைக்காதவர்கள் இந்த அறிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் விண்ணப்பம் வழங்கப்படும் தகவலை அனைவருக்கும் தெரியபடுத்திட வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மூலமாகவும் அல்லது மாவட்ட அணி அமைப்பாளர்கள் மூலம் மாவட்டக்கழகஅலுவலகத்திலோ வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : இளைஞர் அணி, மாணவர் அணிகளுக்கு வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் அமைப்பு ஏற்படுத்தவும், தகவல் தொழில்நுட்ப அணிக்கு பாக அளவில் ஒருவரை நியமிக்கவும், மேற்கண்ட பொறுப்புகளுக்கும் இளைஞர்கள், மாணவர்கள், சமூக வலைதளங்களில் ஈடுபாடு கொண்ட தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்து மாவட்டக் கழகத்திற்கு அவர்களின் விபரங்களை வழங்கிட வேண்டும்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### லடாக் பகுதியில் விபத்தில் பலியான

## திருத்தணி ராணுவ வீரர் உடல் மனைவியிடம் ஒப்படைப்பு!

### ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது!

திருத்தணி, அக்.14-

லடாக் பகுதியில் விபத்தில் பலியான திருத்தணி ராணுவ வீரரின் உடல் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது உடல் ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

திருத்தணி அருகே ஆர்.கே.பேட்டை பகுபகுதியில் உள்ள பெரியராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பெருமாள். இவர் முன்னாள் ராணுவவீரர் ஆவார். இவரது மகன் ஸ்டான்லி. இவர் ராணுவ வீரராகப் பணிபுரிந்தார். இவருக்கு மேனகா என்ற மனைவியும் மற்றும் சுருதிகா என்ற மகளும், அபிஷேக் என்ற மகனும் உள்ளனர்.

ஸ்டான்லி ஜம்மு-காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் ராணுவத்தில் நாயக்சுபேதாரராக இருந்தார். சம்பவத்தன்று பணியின்போது ராணுவ வீரர்களுக்கு வண்டியில் உடைகள் எடுத்துச் சென்றார்.

லே என்ற இடத்தில் மலைப்பகுதியில் சென்ற போது பின்னால் வந்த ஒரு லாரி இவர் சென்ற ராணுவ வாகனத்தின் மீது பயங்கரமாக மோதியது. இதில் படுகாயம் அடைந்த ஸ்டான்லி பரிதாபமாக உயிரிழந்தார்.

அதையடுத்து மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு ஸ்டான்லியின் உடல் விமானம் மூலம் டெல்லிக்கு எடுத்து வரப்பட்டது. பின்னர் சென்னை கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அவரது சொந்த கிராமமான பெரிய ராமாபுரத்துக்கு கொண்டு வரப்பட்டது. பின்னர் உடல் அவரது தந்தை பெருமாள் மற்றும் மனைவி மேனகா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஸ்டான்லி உடலைப் பார்த்ததும் அவரது மனைவி மேனகா மற்றும் குழந்தைகள், தந்தை பெருமாள் ஆகியோர் கதறி அழுதனர். பின்னர் உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி னார்கள்.

தமிழ்நாடு அரசு சார்பில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிரபுசங்கர் அஞ்சலி செலுத்தி ஸ்டான்லியின் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஆறுதல் கூறினார்.

அதன் பின்னர் அவரது உடலுக்கு இறுதிச் சடங்கு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ராணுவ மரியாதையுடன் அவரது உடல் பெரிய ராமாபுரத்தில் உள்ள சுடுகாட்டுக்கு வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு 32 துப்பாக்கி குண்டுகள் முழங்க அவருக்கு ராணுவ வீரர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அதைத்தொடர்ந்து கிறிஸ்தவ முறைப்படி ஜெபம் செய்யப்பட்டு ஸ்டான்லியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

விபத்தில் பலியான ராணுவ வீரர் ஸ்டான்லி கடந்த 28 ஆண்டுகளாக ராணுவத்தில் பணிபுரிந்துள்ளார். அடுத்த ஆண்டு இவர் ஓய்வு பெற இருந்த நிலையில் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.




கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக முரசொலி செல்வம் அவர்கள் மறைவையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு, தொண்டாமுத்தூர் மாரியம்மன் கோவில் திடலில் கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொ.அ.ரவி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தளபதி தியாகு, இளைஞரணி கிஷோர், சஞ்சய் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.